

# நான் நானல்ல

சோ.தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நானல்ல

சோ.தேவராஜா கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

ஏகாதிபத்தியத்திற்கெதிராக உலகெலாம் ஒடுக்கப்பட்ட
தேசிய இனங்களின் சுயநிர்ணயத்துக்காகப் போராடும் சகல
போராளிகளுக்கும் பலஸ்தீன மக்களுக்கும்.

**நான் நானல்ல**(கவிதைகள்)

சோ.தேவராஜா

முதற்பதிப்பு: 2023 மார்கழி

© சோ.தேவராஜா

வடிவமைப்பு : க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் & கலாலயம் பதிப்பகம்

பக்கம்: 60

விலை: 300.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Nan Nananla(collection of Poems)**

**So.Thevarajah**

First Edition: 2023 December

© So.Thevarajah

Layout : K.Bharaneetharan

Published by Jeevanathy, Kalai aham, Alvai & Kalalayam

Pages: 60

Price: 300.00

Printed at Baranee Printers, Nelliady

ISBN:978-955-0958-23-8

ஜீவநதி வெளியீடு – 305 & கலாலயம் பதிப்பகம் – 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...

1. மலைமகள் - 200
2. மலையழகி - 200
3. மழையே
4. பெத்தவள் பாடு
5. தனித்தேன்
6. என்னவளே
7. விசரும் பிடிக்குது
8. நானும் போறதுதானே இனி
9. தெருநாய்
10. அவசரம்
11. உயிர்ப்பின் சில துளிகள்
12. மனிதர்
13. அன்பே அமிர்தமாய் ஊறும் அறவோர் அல்லது பிண வியாபாரிகள்
14. ஹர்த்தால்
15. ஹர்த்தாலே எங்கள் கதி!
16. இன்னுமா இஸ்ரேல் அல்லது எவனாம் பேயன்!
17. உலகப்பாவும் அரசியல் பாவும் அல்லது விக்கிரம சிங்க நமஹ
18. உச்சி மீது
19. மௌனம்
20. இஸ்ரேலுக்கு இஸ்ரேலே நிகர்
21. இஸ்ரேல் இறைபேறே இரங்குவாய் அம்மானே!
22. துலையத்தான் போறான்
23. பாலஸ்தீனம் தலை நிமிரும்
24. இஸ்ரேலா காஸாவா
25. மக்கள் யுகம்
26. எல்லோரும் வெல்லலாம்
27. நான் நானல்ல
28. அலெக்ஸ் - 25
29. உலகமயப் பூராயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்நூலில் 29 கவிதைகள் இடம் பெறுகின்றன. இதில் 03 கவிதைகள் கவியரங்கக் கவிதைகளாகும். அவையாவன உலகப்பாவும் அரசியல்பாவும் அல்லது விக்கிரமசிங்க நமஹ, உச்சி மீது, மௌனம் என்பவையாகும்.

மலையக மக்களின் 200 வருட வாழ்வு நெஞ்சை உருக்கும். அந்த உருக்கத்தில் எழுதிய முதலாவது இரு கவிதைகளும் தாயகம், வளரி ஆகிய சஞ்சிகைகளில் வெளிவந்தன.

மானிட வாழ்வின் துன்பங்களும் நெருக்கடிகளும் நெஞ்சைப் பிழிவன. அவற்றின் அவலங்களைச் சில கவிதைகளாக்கி யுள்ளேன்.

தமிழ் குறுந்தேசியத்தின் கையாலாகாத் தனத்தையும் அவர்களின் வியாபார அரசியலையும் சியோனிச இஸ்ரேலின் உறவையும் பற்றிய சில கவிதைகளும் உள்ளன.

இக்கவிதைத் தொகுப்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இஸ்ரேலின் காஸா மீதான யுத்தத்தையும் அதன் கொடுமை அநீதிகளையும் கண்டு கொதிக்கும் மனோநிலையில் எழுதிய கவிதைகள் மனதுக்கு ஆறுதலளிக்கின்றன.

வட்டுக்கோட்டைப் பொலீசாரின் சட்டவிரோத ஆட்கொலையில் அகப்பட்ட நாகராசா அலெக்சின் நினைவாக ஒரு கவிதையும் உண்டு.

இக்கவிதைகளை வெளியிட்ட தாயகம், புதுவசந்தம், ஜீவநதி, கலைமுகம், வளரி ஆகிய சஞ்சிகை ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக் கின்றேன்.

மேலும் இக்கவிதை தொகுதியை 13வது நூலாக வெளியிடும் கலாலயம் பதிப்பகத்துடன் இணைந்து பொறுப்பேற்றுத் துணை செய்யும் ஜீவநதி வெளியீட்டகத்தின் நண்பர் க.பரணீதரன் அவர்களுக்கும் புத்தகப் பண்பாட்டுப்பேரவை இயங்குனர்களான பாவலர் அழ.பகீரதன், ச.சஜீலன், ச.தனுஜன், ச.அனுஜன், சு.கர்ணிகா, பா.கஜீபா ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

ஏகாதிபத்தியத்திற்கெதிராக உலகெலாம் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணயத்துக்காகப் போராடும் சகல போராளிகளுக்கும் பலஸ்தீன மக்களுக்கும் இந்நூலினை சமர்ப்பணம் செய்கின்றேன்.

விமர்சனங்களை வரவேற்கின்றேன்.

2023.12.04

சோ.தேவராஜா
அரசடி வீதி, பண்டத்தரிப்பு.
sothevarajah@gmail.com
0778851989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமகள் – 200 (1823–2023)

**பிறர்கூற்று**

பேர் மலை மகள்
ஊர் உலை மண்துகள்
வேர் இலை விழுதிலை
யார் அருளுவார் அவளுக்கினி!

வயதிருநூறு முதிரிளங்கன்னி
உயராகாயக் கோட்டை அரண்மனை
அயலமர் அமைச்சர் அரசர் சூழ் படையணி
இயக்கமின்றி இருக்கிறாள் அவள் தனி.

மலைவாழ் மனுசரெல்லாம்
விலைவாசி உயர்வென்று வீதியெல்லாம் முழங்குவார்
உலை எரியவில்லையென்று உணர்வினால் ஒன்றாவர்
தலையற்ற முண்டமாய் தடுமாறும் கட்சிகள் - அவர்தம்
நிலைபற்றிப் பேசினால் நீறாவர்
அலைபாயும் மனிசரையெல்லாம் ஆராரோ ஆட்டுகின்றார்.

**மலைமகள் கூற்று**

மலைமண் தின்று வாயில் உலகைக்காட்டிய
மாயன் என் மக்கள் மலையகத்தார் - இவர்
நிலையென்ன வென்றால் வீடில்லை நிலமில்லை
உலாவர வீதியில்லை விலாசமில்லை யென்பார்மூடர்
ஊர் உலகெல்லாம் உனதானபின்னே பார்முழுதும்
பேர் தெரியாத் தொழிலாளர் ஆள்வாரெனில்
யாரடா என் மக்களை யாரோ எவனோவென்று
ஏனழைக்கின்றார் இனி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர் கொண்டு ஊர் வென்று தேர் பூண்டு
பார் ஆண்ட பேர் பெற்ற பேரனின் பேரனின்
பரம்பரைப் பார்மகள் மலைமகள் மண்மகள்
யார் எனை வெல்வார் இனி.

மலையகத் தேசத்து வித்து நான்
தலை நிமிரத் தரணியாள் தலைவி நான்
தவிக்க விட்டு அடையாளங்கெட்டு
யார் நீ எனக் கேட்டு கரைச்சல் செய்கிறார்.
இந்தியாக்காரரென்பார் இங்கென்ன சோலி என்பார்
வந்தான் வரத்தானென்பார்

வந்து சேர்ந்து நொந்து கெட்டு நோயுள் மூழ்கி
விந்து தரித்து வம்சம் பெருக்கி இருநூறு ஆண்டுகள்
வெந்த தணிந்து வீரம் செருக்கி விளைபயிர் தேயிலையாய் - கரைந்து
உந்துவிசை உலகின் காசுப் பசை பெற
இந்த நாடுதான்... இலங்கைதான்...நான்பெற்ற பிள்ளையடா

இந்து சமுத்திரத்தில் என்பிள்ளை இலங்கையிவள்
ஏமாந்து எவனெவனோ கரம் பிடித்து ஏழையாய் போனாள்
எவர் காப்பார் இனி என ஏங்கித் தவிக்காதீர்!

பிறர்கூற்று

முந்துவினை முழுதும் களைந்து முழுமுச்சாய்
மலைமகள் எழுவாள் மகிழ்வர் மக்களினி
மந்திரம் கற்றவள் மாயன்வரம் பெற்றவள்
தந்திரந் தெரிந்தவள் தவிக்க விடாளினி

கட்சிகள் பின்னே காவடியெடாள்
காவாலிகள் முன்னே ஏறுபோல் பாய்வாள்
ஊர் வலம் கூட்டம் என்று "சோக்கு" காட்டமாட்டாள்
பேர் தெரியத்தன் ஊடக ஊதாரிகள் முன்
பிரமுகராய் பிறர் பேரெடவிடாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையறிந்தாள் தன்பேர் தெரிந்தாள்
இன்னவள் இவள் என்று எல்லோரும் அறிய
கல்வியில் நிமிர்ந்தாள் பல்கலை பயின்றாள்
வல்வினையனைத்தும் பயிற்சியில் தேர்ந்தாள்
ஒன்றுபட்டாள் ஓர் இலட்சம் மக்கள் ஒன்றானார்
நன்று நடந்தாள் ஈரிலட்சம் கைகள் வீசி
ஆளுக்குப்பத்துப்பேர் எஸ்டேட்டுக்கு நூறுபேர்
ஆணும் பெண்ணுமாய் ஆடிப்பாடிக் - கூடிமகிழ்ந்தார்
ஆளும் வழி அறிந்து இயக்கமானார் இணைந்து

ஒரு நூறு ரூபாய் ஒருநாள் ஓராள் ஒரு குடும்பம் என்றாள்
ஒரு கோடி ரூபாய் ஒருநாளின் இயக்கமானது
ஈரடி எடுத்து இயக்கமாய் நடந்தாள் மலைமகள்
இலங்கை முழுதும் மலைமகள் பாதம் பணிந்தது
உழைப்பவர் உலகம் செழிக்க வரம் பெற்றாள்.

வீடுகள் உயர்ந்தன நிலங்கள் நீசரிடமிருந்து தப்பின
பாடுகள் நீங்கப் பலரும் ஆளுக்கு இரு ஏக்கர் நிலமாய் பகிர்ந்தாள்
பல்லுயிரோம்பி பல்லக்கில் பயணிக்க
தேரேறித் தெருவலம் வர "அரோகரா" சொல்லி
அனைவரும் வடம் பிடிக்க வந்தாள்
மலைமகள் என்னே அதிசயம்!

இருநூறு வயதினள்
இருபது வயதானாள்! அவளின் அழகோ தனி!

(தாயகம் 2023 - ஜனவரி - மார்ச்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையழகி - 200

இருபது வயது இளநங்கை என்முன் தோன்றினாள்
மலையழகியவள் மயக்கும் விழியாள்
மாபெரும் மார்பகத் திமிராள்
தென்றலாய் பொழிந்தாள்
கலகலவெனச் சிரித்தாள்
நீண்ட பெருங்கூந்தலால் சுற்றியணைத்தாள் - தன்
கரங்களால் கால்களால் கௌவியணைத்தாள்
உரங்கொண்ட மட்டும் உதரங்களால் முத்தமழை பொழிந்தாள்
மௌன மொழியால் மோனங்காத்தாள்
இன்சொல்லழகில் இன்முகச் சுழிப்பில் நான்
என்னையிழந்தேன் மயக்கத்தில் திளைத்தேன்.

இருபது வயது இளநங்கை என்முன் தோன்றினாள்
இனியென்ன எனக்கு எல்லாம் அவளானாள்
இந்துமா கடலின் கயல் மீன்கள் துள்ளியெழுந்தன
முந்துவது யாரென மலையழகி முகத்தில் மோதி
வந்தமர்ந்தன கயல் மீன்கள் இரண்டு.

கார்முகில் அனைத்தும் அணைந்து பிணைந்து திரண்டன
வார்குழல் மலையழகியின் கூந்தலாய்ப் படர்ந்தன
மலை முகடுகள் மார்பகமாய்த் திளைத்தன
கல்லானாள் கற்பிழந்தாளென்று முனிவன் - தன் சாபத்தால்
சொல்லாத்துயருற்றாள் "கடவுள் அவதாரம்
காலிடறக் கல்லோடு கல்லாகவே ஆனாள்
காலத்தால் அழியாத நெடுமலையாய் நிலைத்தாள்"- மலையழகி.

அருவிகள் ஆறுகள் நீர்வீழ்ச்சிகளெனச் சிரிப்பொலி சிந்தினாள்
காடுகள் நெடுமரங்கள் வேர்களும் கிளைகளும் மலையழகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களாய் கைகளாய் நிலைத்தன
செஞ்சூரியச் செவ்விதழால் கொஞ்சினாள்
நிலவாய் நின்றவள் பிறை நெற்றியாய் மின்னினாள்
வெண்பனி முத்துக்கள் பற்களாய் ஒளிர்ந்தன
இரத்தினக் கற்களாய் ஒளி வெள்ளம் வீசினள்

நட்சத்திரக் குஞ்சுகள் இரத்தினம்
முத்துக்கள் பவளம் கோர்த்து ஆபரணமாய் அணிந்தனள்
தேயிலைத் தளிர்கள் பச்சைநிற ஆடையாய் பசுமையளித்தனள்
தேவர்கள் வந்திறங்கிச் சாமரம் வீசித் தென்றல் படர
நிலநெடு வானத்தில் பாதி ஆனாள் மலையழகி தானாய்

கண்டு பொறுக்காத காடர்கள் மூடர்கள் கயவர்கள்
கல்நெஞ்சத்தவர்கள் மலையழகி கால்களை கரங்களை
வெட்டிச் சாய்த்தனர்
நிர்வாணமாக்கி நீசச்செயல் புரிந்தனர்
மண்ணரிப்பில் மக்கள் மடிந்தார் - தம்
மானங்காக்க மண்மூடச் செத்தார்.

"இது பொறுப்பதில்லை எரிதழல் கொண்டு வா" எனப்
பாஞ்சாலியாய் பாய்ந்தாள்.
பாரதப் போரில் நெஞ்சு நிமிர்த்தினள்
யாரெவரெனிலும் சீறிய சிங்கமாய்ப் பாய்ந்தனள்
காளியாகினாள் கடுங்கோபம் கொண்டாள்
ஆழிசூழுலகில் புதுவிதி எழுதினாள்
ஊழிப் பெருஞ்சுழிப் போர்ப்பறை முழங்கினள்
வேர்கள் விழுதுகள் கொடிகள் மரங்கள் மலைகள் யாவும்
எரிமலைக் குழம்புகள் வீசின.

இருநூறு வயதுக் கிழவியவள்
இருபது வயது இளநங்கையானாள்
மலையழகி நிமிர்ந்தாள் உயர்ந்தாள்
தர்மம் நிலைக்க தப்பிப்பிழைத்தது தரணி.

(வளரி - 2023 சித்திரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையே

மழையே மழையே மழையே
மழையே மழையே மழையே
மாரி மழையே கருமுகில் மழையே
காரிருள் மழையே கருணை பொழிவாய்
கவலை களைவாய் விளைவாய் நெல்லாய் மணியாய்
- மழையே

வெள்ளமாய் வந்தேன் வயலை அழிக்கிறாய்
பள்ளமாய் பார்த்து கடல் குளம் நோக்கிப் போகாமல்
உள்ளே ஏழைக் குடிகளில் ஏன் நுழைகிறாய் அத்துமீறி
- மழையே

கள்ளமாய் கட்டிய கொங்கிறீற் வீடுகள்
தடுத்த கோபத்தால் உனக்கு
வசதியாய் வாய்த்தவை எங்கள் கொட்டில் குடிசைகளோ!
- மழையே

உன் கோபத்தை காட்டியேன்
வழியற்ற சீவன்களை
வாட்டி வதைக்கிறாய்.

- மழையே -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெத்தவள் பாடு

வெள்ளண்ண வேளைக்கு எழும்பி
விளக்கு வைச்சு குசினிக்கை போய்
குந்தியிருந்து விறகு அடுக்கி
அடுப்பை ஊதி ஊதி எரிச்சும்

மழையிலையும் வெள்ளத்திலையும்
நனைஞ்ச விறகு
அடுப்பு இன்னும் மூளுதுமில்லை
மண்ணெண்ணை
விட்டெரிக்க வழியுமில்லை

ஐயோ ! குழந்தைகள்
இரண்டும் எழும்பிகினம்

பால் மா கரைச்ச பாடுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தேன்

தனித்தேன் எனை விட்டுப் போனாயோ
தவித்தேன் உனைவிட்டு வாழ்வேனோ
இனித்தேன் எல்லார் விடுப்பிலும்
உன் நினைவால் விழித்தேன்
எவரெனை வெல்வார் இனி!

வென்றாய் எனை வென்றாய்
சென்றாய் எனை விட்டே சென்றாய்
நன்றாயிருவென்று போனாய்
மன்றாடுகின்றேன் மீண்டு வா இனி!

எல்லோர் கண்களும் எனைத்
துளைக்கின்றன
வல்லார் வகுத்த வழி மல்லாடுகின்றேன்
பொல்லார் உலகில் எனை விட்டுப் போவாயோ
நல்லாய் வாழ்வோம் வாடா விரைந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவளே !

என்னவளே
எங்கு நீ போனாய்
நீயில்லாமல்
நான் எங்கு போவேன்!
- என்னவளே -

கண்ணே மணியே
கற்கண்டுத் தேனே
நீயின்றி நானிங்கு
எப்படி வாழ்வேன்
- என்னவளே -

கொரோனா கொடுநோயில்
கொலை தேசம் ஆள்கிறோம்
சாகிறோம் - ஆனாலும்
வாழ்கிறோம்.
- என்னவளே -

மறைந்தாலும் உன்னை
மறவேன் நான்
நிறைந்து நெஞ்சில்
நீயே வாழ்கிறாய்
- என்னவளே -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசரும் பிடிக்குது

வீழ்ந்து நொருங்குது நாடு
சூழ்ந்து பரவுது நோயிலை எங்கடை பாடு
சுகாதாரம் கெடுகுது
கல்வியும் அழியுது

உழைக்கிற வழியும் தெரியேல்லை
பிழைக்கிற பாடும் புரியேல்லை
நாட்டிலை இருக்க ஆருமே விரும்பேல்லை

வீட்டிலை ரோட்டிலை நெருக்கடி கூடுது
விலையும் ஏறுது விசரும் பிடிக்குது

பிடிக்குது பிடிக்குது விசரும் பிடிக்குது
பிடிக்குது பிடிக்குது விசரும் பிடிக்குது
பிடிக்குது பிடிக்குது விசரும் பிடிக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் போறதுதானே இனி

எங்கடை வீட்டிலை நானிருக்கிறன் தனிய
வடக்கை பாக்கிறன் வயித்தி மரகதம் இல்லை
மங்கிலியம் அப்புலிங்கம் ஆக்களுமில்லை
மேற்கைப் பார்த்தால் நவமணி இரத்தினம் சர்மா கனகலிங்கம்
ஆருமில்லை தெற்குத்திசை எல்லையிலை இருந்த
கிழங்குக்கறி கயிராசியுமில்லை தங்கம் நடலம் தில்லையரும் இல்லை
கிழக்கை யோசிச்சால் தங்கைச்சி செல்லையா முத்தம்மா
வரதர் நாகம்மா அப்பாப்பொடியெண்டு ஆக்களே இல்லை

புளிக்குச் சண்டை பிடிச்ச புளிய மரம் நிக்குது
தேங்காய் களவுச் சண்டையிலை "உன்ரை மூத்த மேன்ரை
நெஞ்சாங்கட்டையிலை பூவரசைத் தறிச்சு
வையுங்கோடி... வேசையள்... தாசியள்..." எண்டு
சொன்ன சனமுமில்லை சந்ததியுமில்லை
ஐயோ, என்ன செய்ய, நானெங்கை போக!

எங்கடை ஒழுங்கை அயலிலை இருந்த சனங்களெங்கை
பொன்னையா நாகம்மா இல்லை பொலீசு கனகசபை இராசமணி
அப்பாத்துரை
பெரியவர் செல்லாச்சி கவிசலை இரத்தினக் குஞ்சியப்பு சின்னமா
ஒருத்தரும் இப்ப இல்லை
பீட்டி பெத்தாச்சி சின்னாச்சி பீட்டன் நாகேசு ஆருமில்லை
வீட்டிலை பாத்தால் என்ரை ஆச்சியில்லை அப்பு இல்லை
அம்மாவுமில்லை
பிறகு வந்த மனுசியும் முந்திக் கொண்டு போவிட்டுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரஞ்சோதி அம்மான் பாலேங்க மாமா மனோன் மாமி லச்சுமிக் குஞ்சாச்சி
பொன்னுக் குஞ்சாச்சி பேரன் சிங்கர் சண்முகலிங்கம் மாஸ்ரர்
சகலன் சற்குணம் பேரன் தங்கராசா சின்னக்கிளி மச்சாள்
சகலன் பரமானந்தம் யசோ குஞ்சர் ரவி வேல்முருகன் மாஸ்ரர்
பண்டிதர் இராசகுரு விருத்தாச்சலம் மாஸ்ரர் சின்னனிலை
எனக்கு சறம் வேண்டித்தந்த மார்க்கண்டு மாஸ்ரர் மணியம்மாஸ்ரர்
சினிமாப் படங்கள் பாக்கக் காசுதாற தேத்தண்ணிக்கடை நடத்தின
சிவராசு அண்ணை, சினிமா படங்கள் காட்டி விளக்கம் சொல்லுற
பரமானந்த சோதி, இன்னும் இன்னும் எத்தினை சொந்தம்
சிநேகிதம் இந்திரன் எங்கை மணியம் சிவலி நீ எங்கை மாவை
வரோதயன், ஜெயக்குமார், வீ எம் குகராஜா, சிவசோதி
நீங்கள் எல்லாம் எங்கையடா போட்டியள்.

செவ்வாய்க் கிரகத்திலைதான் சீவிப்பியளோ தெரியாது
செவ்வாய்க் கிரகத்திலை சீனாக்காரர் ஒக்சிசன் தண்ணி எண்டு
மனிசர் வாழ விஞ்ஞான கண்டு பிடிப்புச் செய்யினமாம்
ஆருமெனக் இஞ்சையில்லை கொஞ்சம் பொறு பொறு
நானும் வாறன் வாறன்
நானும் போறதுதானே இனி.

2024.11.22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருநாய்

“கதவைப் பூட்டி வையுங்கோ...
கண்டதையெல்லாம் கௌவிக் கொண்டோடுகிது
கள்ளக் கறுவல் நாய்
தெருப்பொறுக்கி”
திட்டித்தீர்த்தார் தாத்தா
பேத்தி சிறுமி சினந்தாள்
தாத்தாவைப் பார்த்தாள்.

“தாத்தா நீங்கள் சின்னனிலை என்ன செய்தனீங்கள்
உங்கடை பெரியாச்சி வீட்டிலை
உறியிலை
கோழிக் கறியை களவெடுத்தீங்கள்
ஹொஸ்ரல்லை படிக்கேக்கை ஸ்கூல் விட முதல்
உங்கடை கூட்டாளியளோடை
மற்றப்பிள்ளையளுக்கு
பேறன்ஸ் வீட்டிலையிருந்து வந்து
ஆசையாய் குடுத்த சாப்பாட்டை
அவேன்ரை பெட்டியுடைச்சுக் கொண்டோடி
பத்தையளுக்கை வைச்சுப் பறிபட்டுச்
சாப்பிட்டியள்...

எல்லாற்றை வீட்டையும் போய்
தேடித் தேடிச் சாப்பிட்டியள் முந்தி
தெரு நாய் பாவம்
அதையேன் திட்டுறியள்
திட்டுறதுக்கு உங்களுக்குத் தகுதியில்லை
நீங்களும்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரம்

எழும்பு எழும்பு

அம்மா குளறுறா சத்தம் போட்டு குளப்புறா
கண்ட கனவை அம்மா குளப்புறா
ஆசையைக் கெடுக்கிறா அவதி பண்ணுறா

எழும்பு எழும்பு நேரம் போவிட்டு
பள்ளிக்குடம் போகாமல்
படுக்கப் போறியோ
நானும் வேலைக்கு போகவேணும்
நேரம் போவிட்டு நேரம் போவிட்டு...

தேத்தண்ணி ... தேத்தண்ணி ...
நாயைக் கலை கலை... நாயைக் கலை கலை...
காலுக்கை வருகுது... காலுக்கை நிக்குது...
தாத்தா குளறுறார்.

றூபி, றொக்ஷி செல்லக்குட்டி செல்லக்கண்ணா
நாலு நாய் குட்டி
என்ர தங்கைச்சி என்ர தம்பி
என்னைக் கொஞ்சம் பாருங்கோ
கொஞ்சிக் கொஞ்சிப் பேசுங்கோ
அக்காவைப் பாருங்கோ அக்காட்டை வாங்கோ
அக்காவை நக்குங்கோ
அக்காவோடை ஓடுங்கோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லைத் தீட்டு மூஞ்சையைக் கழுவு
உடுப்பு போட்டியோ சப்பாத்து எடுத்தியோ
தலையைச் சீவக் கெதியெண்டு வா...
எண்ணையும் வைக்காதை சிக்குத் தட்டாதை
அந்தப் பக்கம் சொத்தி இந்தப்பக்கம் நெளியுது
ஒருபக்கம் மேலை ஒரு பக்கம் கீழை

வடிவாய் வடிவாய் தலையைச் சீவணை
அம்மா அம்மா அயன் பண்ணிப் போட்டியோணை
சாப்பாட்டுப் பெட்டி எங்கை
சப்பாத்தைக் காணேல்லை
ஏழுமணியாய் விட்டுது வான் வரப்போகுது

கெதியாய் வா வா கெதியாய் வா...வா...
தாத்தா கத்துறார் நேரம் இப்ப ஆறம்பதாகுது

சும்மா சும்மா கத்தாதேங்கோ
கோண் அடிக்குது வான் வந்திட்டுது
சாப்பாட்டுப் பெட்டி, தண்ணிப் போத்தல்
விட்டிட்டு போறியோ ...
இந்தா... இந்தா...
கொண்டோடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பின் சில துளிகள்

**மனிதன்**

மனிதன் நானென்றும்
மன்னுலகம் இதுவென்றும்
மதிப்புடைய நமது
மந்திரிகள் தந்திரிகள்
மாதமொரு விழாக் கோலம்
மாண்புற வைத்து
மனிதனென்று நம்மைப்
பழிக்கிறார்கள் - கேளீர்

**அரசியல்**

அரசியலே பேசிடுவோர்
ஆட்சியிலே வீற்றிருப்போர்
ஆட்களை இழுத்து வந்து
ஆயிரம் விழாக்களிங்கே!
அரசியல் அவர்கட்கு
அதுவெல்லாம் நம்மவர்க்கு
அணுகுமோ உதவுமோ!
ஐஐயோ... ஐஐயோ...
அது வேண்டாம், அது வேண்டாம்

**உழைப்பாளி**

உழைப்பாளி உலகின்
ஊழலை உணருவோன்
உணர்ச்சியில் திணறுவோன்
உண்மை உரைத்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரத்து அழுதிட
ஊமை அவனிங்கே
உளறுவார் யாரிங்கே?

அரசியல் விழாக்களெல்லாம்
அவனுக்கு ஒப்புமோ!
கலைமகளின் கல்வியில்
நிலைபெற்ற மக்களின்
கலகலப்பே அதுவன்றோ - அவன்
கலக்கமும் இதுவன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதர்

நீண்டதொரு காப்பெற் றோட்
வேகமாய் வந்து நின்றது கார்
ஹோண் அடித்தார் மூன்று தடவை
நாய் விலகி வழி விட்டது
குட்டியோ அப்படியே கிடந்தது
நிறுத்திய காரிலிருந்து இறங்கியவர்
முன்னால் வந்தார் குனிந்தார்
இரு கைகோர்த்துத் தூக்கினார்
குட்டியை அணைத்தார்
தாயருகில் விட்டார் தடவி.

ஏறினார் கார் முன்னோக்கி நகர்கிறது
அவரோ முன் கண்ணாடியில்
பின்னோக்கிப் பார்க்கிறார்
குட்டி நிமிர்கிறது
தாய் குழைந்து வாலாட்டி வழியனுப்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே அமிர்தமாய் ஊறும் அறவோர் அல்லது பிணவியாபாரிகள்

மனிசர் இரத்தத்தில் அறுசுவை புசி அறிஞர்கள்,
விடுப்புக்கள் பிடுங்கும் விண்ணறிவாளர்,
பிறரின் விரக்தியில் வேதனையில் செத்த வீட்டில்
கிசுகிசு சிலாகிக்கும் எழுத்தாள விம்பங்கள்,
முள்ளிவாய்க்காலில் முகவரிதேடும் முகமற்ற முண்டங்கள்,
வில்லங்கங்களில் விலாசமெழுப்பும் வீரதீரக் குஞ்சுகள்
சாவீட்டிலும் செத்தபிணம் தானென்றும் தன்னையே பிறர்
உற்று நோக்குவரென்றும் உளப் பூரிப்பில் ஆடுகள நாயகர்கள்,
பிணம் காயம் சனம் மனிசக் கழிவுகளில் கனவில்
கணந்தொறும் கவியின்பங்காண் வித்துவ வேந்தர்கள்,
கொலை செய் வெறியராய்
வெளியார் கொடு வீரத்தில் குளிர்காய் குதூகலத்தில்
கலை காண் காமுகர் மகிழ் அணியும் படிமமும் பரப்பும் கவிஞர்கள்,
செத்த பிணத்தில் தன் பிள்ளை தேடும் தாயின்
பெத்த நோ மாறுமுன் புறமுதுகிடாத முகத்தில் புலம்பிடு
புறநானூற்றுப் புலவர்கள்
ஊழிச் சந்தையின் விலைப்பட்டியலில் விலாசந் தேடும் விற்பன்னர்கள்
முள்ளிவாய்க்கால் கஞ்சியிலும் சமையல் குறிப்பிலும்
- கவித்துவங்காண் கவிஞர்கள்
உடல் எரிந்த புகையில் கைகள் கட்டப்பட்டு மல்லாக்காகக் கிடந்த
பெண்களின் நிர்வாணத்தின் மீது ஊழிப்பருந்து மிதந்து சென்றதை
மீள் வாசிப்புச் செய் மீடியாக்காரர்கள்,
தாயை மகளை தந்தையை மகனை மருத்துவனை தாதியை
அதிகாரியை பெண் பணியாளரை
நிர்வாணம் நிர்வாணம் நிர்வாணமென நீட்டிவாசிக்கும்
நெஞ்சுக்கு நீதிசெய் நற்றமிழ் சொல்லேர் உழவர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்காலில் கொள்ளி வைத்த அலங்காரத்தின் ஆடையின்
துண்டு துணியின் குவளையின் கைப்பையின் கோதுகளின்
உடல் வேல மரமுள்ளின் ஆடம்பர வேலைப்பாட்டில்
அமைந்த நினைவுச் சின்னத்தின் சிருங்காரத்தைச் சிலாகித்து மகிழ்
அம்மண அரசனின் அமைச்சர்களும் அணியாளர்களும்,
2020 - பெரிய வெள்ளியில் தேவகுமாரனின்
முள்முடியே வைரசாக இருந்ததென்றும்
2020 - உயிர்த்த ஞாயிறில் உயிர்த்தெழுந்த
கிறிஸ்து மாஸ்க் அணிந்தாரென்றும்
தன் நகைச்சுவையில் தானே சுய இன்பங்காண் கலைவாணர்கள்,
வில்லன்களை நாயகர்களாக்கி விலாவாரியாக விளாசுவதும்
பிட்டும் தோசையும் பீட்சாவுமென்ற அவர்தம் மணிவாக்கில்
- மகிழ்வுறு மாண்புடையோர்,
கடல்நீரில் உப்புத்திரி வற்றாப்பளையில்
கோடைமுழுதும் நின்று எரியுமென்றுசொல் அற்புத வித்தைக்காரர்கள்,

அறிஞர்கள் விண்ணறிவாளர்கள் எழுத்தாள விம்பங்கள்
வீரதீரக்குஞ்சுகள் நாயகர்கள் வித்துவவேந்தர்கள்
கவிஞர்கள் புலவர்கள் விற்பன்னர்கள் மீடியாக்காரர்கள்
சொல்லேர்உழவர் அமைச்சர்கள் அணியாளர்கள்
கலைவாணர்கள் மாண்புடையோர் அற்புதஞ்செய் வித்தகரென்றும்
பலவாறாக ஒன்றாகி இரண்டாகி
தேவரும் அசுரரும் ஆக மாறி அகந்தை தலைக்கேறி
மண்வயலுழு பாற்கடலில் பனைமரத்தை மத்தாக்கி
கடலலையை கயிறாக்கி தாறுமாறாய் அமிர்தம் கடைந்தோர்
கடைசியில் கண்ட நஞ்சுநிலம் மீதில்
நஞ்சுண்ட கண்டன் தோன்றும் வரையிலே
எஞ்சிய மனிசராய் மிஞ்சிய மாந்தரெல்லாம்
மாழாதிருக்க மருந்தொன்று தா மாதவனே எம்பெம்மானே!

(முள்ளிவாய்க்கால் பற்றிய அளப்பறை பதிவுகளின் ஓர் எதிர்வினை)

- ஜீவநதி : 203, 2023 ஆனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹர்த்தால்

காலமை வெள்ளண்ணவே
எழும்பியும் போட்டன்
குளிச்சு முகங்கழுவி
வெளிக்கிட்டும் விட்டன்
ஸ்கூல்பாக்கைக்
கழுத்திலை கொழுவியும் போட்டன்

வானையும் பாக்கிறன்
வானும் வந்த பாடில்லை இன்னும்
நேரமும் நல்லாய் பிந்திப்போச்சு

ஹர்த்தாலெண்டு ஆரோ
சொல்லுகினம் மாமா
ஹர்த்தாலெண்டு கலண்டரிலை
போடேல்லை மாமா

நானும் ஆறுதலாய்
படுத்திருந்திருப்பேனே மாமா
ஆருக்கும் அது
இடைஞ்சலில்லைத்தானே

- ஜீவநதி - 212 - 2023 புரட்டாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹர்த்தாலே எங்கள் கதி!

(தமிழ்த்தேசியத் தலைவர் ஒருவரின் ஒப்புதல் வாக்குமூலம்)

அந்தகாலத்திலை நாங்கள் பொடியள்
எந்தப் பிரச்சினை எண்டாலும் இளைஞர் அணிகள்
கல்லெறிவம் கதவுடைப்பம் வேணுமெண்டால் ஆட்களையும் முடிப்பம் -
உது எல்லாம் பெரிய வேலையில்லை
சொல்லக் கொள்ளத் தேவையுமில்லை
ஏனெண்டால் நாங்கள் பொடியள்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை
எங்கள் இலக்காகும் கண்ணாடி உடைப்பம்
இ.போ.ச எண்டால் ஓடாதை நிறுத்தெண்டால நிக்கும் அது
இதில் போனால் சங்கடம் எண்டு சனம் சொல்லும்
எங்களுக்கு அவ்வளவு மரியாதை
சொல்லப் போனால் பய பக்தி.

முப்பது வருஷயுத்தம் முடிஞ்சு
இப்ப பதின்னாலு வருஷமும் வந்து முடியுது
தமிழீழமும் இப்ப சமஸ்டியாப் போச்சுது
எங்கடை தலைமயிரும் இப்ப நரையாய் ஆச்சுது
எலெக்ஷனும் வருகுது என்னண்டு சொல்றதெண்டு
தெரியேல்லை எல்லாம் முடிஞ்சுது.

எலெக்ஷன் வந்தால் வீடுகள் போகலாம் வரலாம்
கும்பிட்டுச் சிரிக்கலாம் ஒண்டாச் சேர்ந்து
இருந்து கதை பேசலாம்
கொள்கை பரப்பலாம்.
இந்த அரசாங்கத்துக்கும் பிராக்கில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைச் சும்மா அலைக்கழிக்கிறாங்கள்
சனத்தின்ரை காணியை விடேல்லை
காணாமல் போனவை பற்றிக் கதைகிதையையும் காணேல்லை
சிறேலை இருக்கிற மிச்சப் பேரையும் இன்னும் விடேல்லை

சும்மா இருந்த பிள்ளையாருக்கு முன்னாலை பின்னாலை
தம்பாட்டிலை புத்தரை வைச்சு அரசமரமும் நடுறாங்கள்.

சனங்கள் எங்களைப் பேசி நாறடிக்குது
நாங்கள் என்ன செய்யலாம்
நாங்களும் நாலைஞ்சு பேர்

ஆளுக்கொரு தலைவர் கட்சி கூட்டு
துலைஞ்சு போவாங்கள்
ஒண்டு சேரவும் வழியில்லை

மனிதச் சங்கிலிப் போராட்டம் மக்கள் திரளுவினம் எண்டம்
சனம் அருளவுமில்லை ஆருமதைக் கவனிக்கவுமில்லை

மீடியாக்கள்ளை முழங்கினம் ஹர்த்தால் கதவடைப்பெண்டம்
எல்லாருக்கும் விடுமுறைதானே வெண்டுவிட்டம் ஒரு மாதிரி
ஹர்த்தாலே எங்கள் கதி!

2023.11.22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னுமா இஸ்ரேல் அல்லது எவனாம் பேயன்!

கொடுமை பலபுரி கொலைகார நாட்டின்
உடுக்கு வாசித்து உருவேற்றும் ஊதுகுழல் தொலைக்காட்சி
யாழ்ப்பாணத்தில் தமிழர் ஐக்கியம் பேச
ஆளொன்றை ஆகாசத்திலிருந்து கொண்டுவந்தார் அனுமன்
ஆள் தமிழன் வலு விண்ணன் அறிவுரை சொன்னார்... ஆஹா...

பலஸ்தீனச் சனங்களின் நிலங்களை இஸ்ரேல்காரராம்
எல்லோருமாய் காசுகொடுத்து வாங்கினராம்
புலம்பெயர் தேசத்தார் காசுகளை நாம் கறந்து
வடகிழக்கு நிலங்களை வாங்க வென்று
தமிழ்த் தேசியநிதி சேர்த்துச் செய்யலாமாம் இஸ்ரேல் போல்
இது நல்ல உதாரணமென ஆர்ப்பரிப்பார் தமிழ்த் தலைவரெல்லாம்

பலஸ்தீனக் குழந்தைகளை பெண்களைச் சனங்களைச்
சுட்டெரித்துக் கொல்லும் சூடாற முன்னமே
ஈழத்தமிழரெலாம் முள்ளிவாய்க்காலில் கொள்ளி வைக்க நேரமின்றி
எவனோ கொன்று மகிழ்ந்த பின்னருமா சொன்னாய் இஸ்ரேல் என்று
ஐயா... பெரிய ஊடகப் பெம்மானே... என்ன சொன்னாய்
இன்னுமா இஸ்ரேல் எமக்கு உதாரணம்!
இதைச் சொன்னவர் எவனாம் பேயன் என்பார் எந்தமிழர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப்பாவும் அரசியல் பாவும் அல்லது விக்கிரம சிங்க நமஹ

உஷ் - மௌனம்
ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
சீரிலங்கை கூறுபட்டால் யாரிங்கு கூத்தாடி?
வேரறுந்து வெளிநாடெலாம் தேடி சீரழிந்து மொழி மறந்து
பாரெங்கும் பரதேசிகளாய்
ஐரோப்பிய வெள்ளைத் தோல்களுக்கடி பணிந்து
தூசி, புளுதியிலாத் தேசத்தில்
கொசுக்களும் ஈக்களுமில்லா குளிர்நாட்டில்
போயிருக்கும் புலம் பெயர் தமிழர்களே
ஊர் இரண்டுபட உதவாதீரே!

உஷ் - மௌனம்
புஷ் - கவனம்

அரசியல் என்பது விஞ்ஞானம்
தெரியாதார் பேசாதிருப்பது நலம்
புரியாத பத்திரிகை ஊடகப் புளுகுகளை
அரிதான உண்மையென அன்றாடம் ஏற்பதும்
ஏன் எதற்கு எப்படி என்ற சான்றுகளின்றி
சன்னதமாடி கண்டபடி பேசிக்காறித் துப்புவதும்
தான்தோன்றித் தனமாய் தலைவரெலாம்
தம்பாட்டில் உளறுவதும் காசும் அரசியலும்
கலப்படமாய்ப் போனதனால்
ஊரும் உலகும் உருவழிந்து போனதையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம் - மலையகம் - தமிழர் என
ஒடுக்கப்பட்டோர் இனம் மூன்று தம்முன்
வடுக்கிளறிக் கொடுக்கிழுக்காது தாம்
படுகின்ற துயரெல்லாம் பகிர்ந்து நாம்
நடுகின்ற இனஉறவுப் பயிர்வளர்த்து
எடுக்கின்ற அரசியல் தீர்வின் முடிவில்
தொடுக்கின்ற போர் வெற்றி பெறும்
உறுதி திண்ணம்! திண்ணம்!

சந்திரிகா நமஹ!
விக்கிரமசிங்க நமஹ!
ஆண்டவன் சைவத்தில் இரு கூறு
சிவமும் சத்தியும் என்பது பேரு!
இரண்டும் ஒன்றானால் உலகம் உண்டு
மிரண்டு வேறானால் உலகந் துண்டு!

பிரண்டு படுத்தாலும் உருண்டு பிரண்டாலும்
அர்த்த நாரீஸ்வரர் ஆவது ஒன்றே
அரசியல் அரங்கில் பிரதமர் வேறு
ஜனாதிபதி வேறு!
இரு வேறு கூறானால் அரசியல் நாறும்
அந்நியர் புகுந்துளார் ஆபத்து அதிகம்!

உஷ் - மௌனம்
புஷ் - கவனம்

என்னை அவிச்சுத்தின்ற பூனையது பச்சைப் பூனைதான்!
என்னைப் பொரிச்சுத்தின்ற பூனையது நீலப் பூனைதான்
பச்சை ரத்தம் பருகியது பச்சையானது
சிவப்பு ரத்தம் பருகியது கறுத்து நீலமானது
பசை கொஞ்சம் பச்சையில் அதிகமென
ஆசை மெத்தி அதன் அருகாய்ச் செல்லல்
தமிழ்ப் பாஷையரின் ஃபாஷன் அதுதான்!
மோசமாய் போவோம்! முழுதாய் நம்பாதீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுக்கு இங்கே பாராளுமன்றில்
கோருவது மூன்றில் இரண்டு!
ஆருக்கும் பின்னால் தனிக்கட்சி பின்னலைதல்
ஊருக்கு முதவாது எனும் அரசியல் தெரியாது!

தேசிய இனம் மூன்றும் தேவை தீர்வு எனில்
பேசியபடி சுயநிர்ணயம் காணுதற்காய்
யாப்பின் அறிவு தெளிதல் வேண்டும்
போய்ப்பின் ஒரு கட்சி முதுகு சொறிதல்
வாய்ப்பாய்ப் போகும்! அவர் பின்பும்
பேரின வெறி கொள்ளப் போர் தொடங்கி!
அந்நியர் பின் வந்து விசர் கொள்ள!

உஷ் - மௌனம்
புஷ் - கவனம்

பேச்சு நடக்கிறது பிறகென்ன விசர் கொள்ளல்
மக்கள் எழுச்சி யொன்று புதிதாய் பிறக்கிறதாம்
வாய்ச்சவடால் பேசியபடி வப்புகள் சிலர்
போய்க் கூடி ரயரைக் கொழுத்துவதும்
வயதானோர் வருத்தக்காரர் பிள்ளைகளென
தயவாய்ச் செல்வதைத் தடுத்து
ஹர்த்தால் எனக் காடைத்தனம் புரிவதும்

திருமலையில் குண்டுகளும் வாழைச் சேனையில் கொலைகளும்
அருமந்த நாட்டில் ஆர்தான் செய்கின்றார்?

காடையர் என்போர் பாடையேறும் வரை
மூவினத்துத் தேசியத்துள்ளும் முழுதாய் உள்ளார்!
காடையர் பேரைத் தேசிய இனத்தின் பேரால் குடையாதீர்!
ஆடையணியின்றி அரைகுறை வயிற்றோடு
அன்றாடங் காய்ச்சியராய்த்
தேடியுழைக்கும் மக்களாய் அவரை நினையாதீர்!
கேடுவரும்! தேடி வரும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரிகா நமஹ ! விக்கிரமசிங்க நமஹ

பத்தொன்பதாந் திருத்தமேன் பண்ணினீர் ஐயா!
பாதியிலே பாராளுமன்றப் பாடையிலேறி
யுத்த நிறுத்தத்தை முடித்து நீறாக்கும் சமர்காண
பித்துப் பிடித்ததோ! பெருமானே அருளாளா!
மீண்டும் வேதாளம் முருங்கையிலேறுவதே
விக்கிரமசிங்கன் காதை
நீண்டு தொடர வழியாமோ?

(2002 - கொழும்பு தமிழ்ச்சங்கக் கவியரங்கில் வாசித்தது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உச்சி மீது"

உச்சி மோந்து அன்புகுழைய அம்மா வேணும்
உச்சி பிரித்து தலை சீவிவாரிவிட அம்மா வேணும்
உச்சி பிசைந்து எண்ணெய் தடவி உடம்பின்
ஊத்தை உருட்ட அப்பா வேணும்

ஆருக்கும் பயமின்றித் தெருவோரம் நடக்கத்
தம்பியர் வேணும்
உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை
உடற் பயிற்சி செய்ய நண்பர்கள் ஒன்று சேர வேணும்
ஆர் எவர் வந்து வாளெடுத்து ஆட்கள் சூழ்ந்து தம்
பேர் சிறக்க "ஆவா" என்று அடிபடுவோன்
தலை சீவத் தோழர் வேணும்

வீரம், துணிவு, நம்பிக்கை, நிச்சயம் என்றுணர் என்
அண்ணன் எனக்கு வேணும்
அக்கா என்னோடு அழைத்து பக்கத்திலிருந்து
பாடியாட எக்காலமும் என் அக்கா வேணும்
தங்கைச்சி என்னருகில் தக்கபடி விளையாடிய
என் தங்கைச்சி வேணும்
பேய், பிசாசு, பூதக்கதைகள் சொல்ல பேரன், பேத்தி வேணும்.

எங்களுக்கெல்லாம் மரம் நாட்டி தண்ணீர் ஊற்றி
பொங்கும் பூமி குளிரத் தண்ணீர்பாய்ச்சி பொலிவுறு
எந்தையும் தாயும் எங்களுடன் இங்கு வாழ வேணும்
பிள்ளைகள் மரணச்சடங்கை நல்லாய்ச் செய்யத்
தயாராகுங்கள் என்றது ஐ.நா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோ நாங்கள் ஐயோ, இது பொறுக்குமோ?
நெஞ்சு பொறுக்குதில்லையே!

குடும்பம் குலைந்தது குழந்தைகள் குழம்பின
நுகர்புச் சுய இன்ப அடுப்பில் எரிந்தது அன்பு
சுருக்கிட்டுச் செத்தது கருணை
உலக மயத்தில் உருக்குலைந்து சிதைந்தது உண்மை
பண விஷத்தில் நீலம் பாரிச்சது பாசம்
வட்டியிலும் வங்கியிலும் உறவின் கருச் சிதைவு
பயத்திலும் சந்தேகத்திலும் பலியானது அயல் எனும் உறவு

வெள்ளையிலும், கொழுப்பிலும் தசையிலும் அழுகியது அழகு
கோபுரப் பளிங்கு ஆலயத்தில் கழுவேறியது நன்மை
அடியும் முடியும் தேடிய கைகளால்
மண்ணடியில் பள்ளத்தில் மடிந்தவர் கணக்கில
விண் முடி தேடிச் சென்று புனிதங்கள் உடைத்து
உச்சி வெய்யிலில் உடல் வேர்வை வழிந்து சோர்வை வெல்லும்
உழைப்பாளரின் உச்சியில் முடியேறும் போது மானிடப்பிடி வெல்லும்
பூரண பொருள்முதல்வாதி அச்சமற்றவன்.

அமெரிக்கக் குஞ்சம் கட்டிப் பட்டம் விட்டுப்
பறந்தது உலகாழும் கழுகு!
சாவில் தொங்கும் படி கேட்ட அமெரிக்கம்
வாலறுந்த பட்டமாய் தொங்கியது குற்றுயிராயய் சர்வதேச அரங்கில்
அறுநூற்று முப்பத்தெட்டு கொலை முயற்சிப் பட்டங்கள் பறக்கவிட்டு
கொட்டமறுந்து முனகியது சி.ஐ.ஏ!

ஈழத்தின் உச்சியில் கூடுகட்ட குந்திய இந்தியக் குஞ்சு
பாதாளம் நோக்கி படுகுழியில் வீழும்
ஈழம் மீளும்
மீளமீள வெல்லும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌனம்

வாழ்த்துப்பா

" எல்லாம் உலகமயம்!
எல்லாம் உலகமயம்!
எல்லாம் உலகமயம்!"

"சிவாயநம என்பதெலாம் போச்சு
எல்லாம் சிவமயம் என்பதென்னாச்சு!

ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க!
ஏகப் பிரதிநிதி என்பரெலாம் வாழ்க!
ஏகமும் ஏகமுமே இணைவாய் போற்றி!
ஏகாதிபத்தியத் தாசராய் இருப்பாய் போற்றி

மக்டொனால்ஸ் வாழ்க "பிஸ்ஸாகற் வாழ்க!
தோசைக் கடை தோற்க வடைக் கடை முடிக!
ஹவுஸ் ஒவ் ஃபஷன் வாழ்க ஃபிறெஞ் கோணர் வாழ்க!
புடவைக்கடை வாழ்க! நகைக்கடை வாழ்க
புத்தகம் ஒழிக! கவிதை யழிக!

தமிழரும் சிங்களரும் மோதும்படியாய்
ஏதும் தூசணம் எழுதுவார் போற்றி!
அவ்வகைப் பத்திரிகையாளரே போற்றி! அதற்கிணை
அனைத்துச் சிங்கள ஊடகரே போற்றி!

முஸ்லீமும் தமிழரும் முழுக்கௌரவத்தோடிணைவதை
முழுமுதலாய்த் தடுப்பாய் வாழி!
"கொல்லப்பட்ட முஸ்லீமின் ஜனாசா எங்கே" என
"சாம்பலைக் கொண்டு போ" என வீரம் விளைப்பாய் - தமிழே போற்றி!
தமிழ்ப்புலி கடத்தினரென கலவரம் மூட்டும்
அடிப்படைவாத முஸ்லீம் தமிழே போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தகனொருவன் நிலாவிலே ஏறிக் குந்தி
மானுடத்தின் கூடலிலே பொன் மொழி புகல்வான் வாழி!
உலகமெலாம் யூதர் உளார் என்பான் வாழ்க!
அகிலமெலாம் அதற்கடுத்து தமிழர் உளார் என்பான் அவன் வாழி!

மத்திய கிழக்கின் இஸ்ரேலே நீ போற்றி!
தென்னாசியத் தீவின் திகழ் தமிழே நீ போற்றி!
முன்னாள் அமெரிக்க மிஷனின் கல்வியே நீ போற்றி!
அமெரிக்க அடியார்க் கடியரே! அரோகரா!

போற்றிசை பாடாப் புலவர் போயொழிக!
வாழ்த்துப் பாப்பாடாப் பேயரெல்லாம் போயொழிக!
ஒத்த கருத்துச் சொல்லும் எலாரும் வாழ்க!
எதிர்க்கருத்து ஓதும் எவரெலாம் ஒழிக!
ஏகமேதுமிலா எதிரணியாய் இருப்பாரெலாம்
இல்லார் இல்லாரே எலாருமாய் ஒழிக!
***

காக்கக் காக்க நாவைக் காக்க
கண்டபடி ஏதும் கதைக்காதிருக்க!
கவிதை எழுதிக் காலம் காத்து
கவனம் கொள்ளாதிருப்பாய் போற்றி!

பொல்லா விலங்கினங்கள் போயகல வந்தருளி
மெய்யாய் மானுடங்கள் கூடிப்பேச வழியருளி
பொய்யாய் புளுகாய் ஆமாம் சரணம் தாம்பாடி
பல்லோரும் ஏத்த நீ போற்றும் தமிழே நாம்
எல்லோரும் தாள் பணிந்தோம் பயந்து!

சமாதானம் ம்னதாமாச
சமாவா! தமாசா!
தமச சமச! தமச சமச!
***

ஊருக் குழைத்திடல் மௌனம் - நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் மௌனம்
போரிட நின்றிடும் போதும் - உளம்
பொங்கலில்லாத மௌனம் மெய்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலுக்கு இஸ்ரேலே நிகர்

எரிமலை வெடித்துச் சிதறி நெருப்பாறு பாய்ந்து
எரிந்து கருகி மடிவோர் பலர்

சுனாமி சொல்லாமல் கொள்ளாமல் நிலத்தைச் சூழ்ந்து
மரங்களை முறித்து கட்டிடங்களை கௌவி எறிந்து
மனிசரைக் கொல்லும் கணக்கின்றி

வான் முகடு சரிந்து கொட்டித் தீர்த்த பேய் மழையில்
வெள்ள மடித்துச் சாவார் சனங்கள்

மலை முகடு மண் கல் உருண்டு பிரண்டு வீடுகளை மூடித் தம்
நிலை தெரியாது மண்ணோடு மண்ணாகும் மக்கள் பலபேர்

கடல் பனிப்பாறையில் மோதுண்டு கப்பல் மூழ்கையில் கடற்சுழியில்
உடல் மூச்சடைத்து கடலடியில் முடிவோர் கதை பற்பல
ஆற்று வெள்ளத்தில் அள்ளுண்டு ஆயுள் முடிக்கும் ஆட்கள் எத்தனை

நல்ல நடுறோட்டில் நாய்குறுக்கே பாயும்
நல்ல பல மனிசர் வாகனங்கள் நேராக மோதும்
குறுக்குறோட்டில் சிதறும் தலைகள் பல்லாயிரம்

எரிமலை சுனாமி பேய் மழை மலைமுகடு பனிப்பாறை
கடல் ஆறு வாகனம் நடு றோட்டு என்பவை தாமே நினைத்து
கொடுந்திட்டம் தீட்டிக் கொல்லுந்திறன் அற்ற
மூளையுள்ள பிணந்தின்னிக் கொலைஞரல்ல
ஏன் என்று கேட்க உலகிற்கே இயலாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் என்ற வெறிபிடித்த
பெஞ்சமின் நெதன்யாகு என்பவனல்ல அவை.

விசரன் என்றால் நோயாளரை அவமதிக்கும்
பேயன் என்றால் அறிவற்ற சாதாரண மனிசரை அவமதிக்கும்
மிருகம், பிசாசு என்றால்
மிருகம் பிசாசுகளையே அவமதிக்கும் சொல்லாகும்

விசரன் பேயன் மிருகம் பிசாசு பெஞ்சமின் நெதன்யாகு என்றால்
அத்தனை சொற்களுமே அழுகிச் செத்துவிடும் தாமே தூக்கில் தொங்கி

பெஞ்சமின் நெதன்யாகு
இஸ்ரேல் சியோனிஸ்ற் என்றால்
அவனுக்கு அவனே நேர்
இஸ்ரேலுக்கு இஸ்ரேலே நிகர்

2023-11-17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் இறைபேறே இரங்குவாய் அம்மானே!

**ஸ்தோத்திரம் 01:**

இரணியாய நமக என்றோதும் இஸ்ரேல் பெரும் பேறே
அரக்கர் குலக் கொழுந்தே அசுர பலம் மிகக்கொண்டோனே
இருக்கின்ற தேசமெங்கும் இருந்துறை இறையே
பெருவல்லரசாம் அமெரிக்காவிலுறை ஐம்பத்தொன்பது இலட்சமே
ஐரோப்பாவில் அகன்றுவாழ் இருபத்தெட்டு இலட்சமே
ஆபிரிக்காவில் தென்னமெரிக்காவில் மெக்சிக்கோ கனடாவென
பெருகிவாழ் யூதர்குலக் குஞ்சுகள் பத்து இலட்சமே
இரும்புக் கோட்டையுறை இஸ்ரேலின் முப்பத்தெட்டு இலட்சமே
இருப்பது பதினைந்து மில்லியன் என்று உலகில் உரைப்பினும்
உலகெலாம் மனிதவுயிர் எழுநூற்றெண்பத்தெட்டு கோடியெனினும்
உனக்கென்ன? உதை கொடு, அடி கொடு, உலக நாயகன் நீயே!

**ஸ்தோத்திரம் 02:**

உன் சாதனையென்னே!
உருவானாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டில்
எழுபத்தைந்து வயது தானேயுனக்கு
உலகெலாம் உன்பாதம் பணியவை பரமனே
உருவான நாள் முதல் பாலஸ்தீனியரை ஆயிரமாய்ப் பல்லாயிரமாய்
கருவழித்து உயிர் பறித்து உருக்கொண்டாய் உத்தமரே!

எகிப்துடன் மோதி சினாய்க்குள் சீறிப்பாய்ந்தாய்
காசாவை கட்டுப்படுத்தி சுனாமியாய் சுழன்றடித்தாய்
காசாவின் நீளமோ நாற்பத்தைந்து கிலோமீற்றர்
அகலமோ ஆக எட்டுக் கிலோமீற்றர்
இருபது இலட்சம் பேர் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னையே ராசாவாக கொண்டனரே அம்மக்கள்
வாழிய பல்லாண்டு வாழியவே!

**ஸ்தோத்திரம் 03:**
சிரியாவில் சினந்தாய் கோலோன் குன்றென நிமிர்ந்தாய்
ஜோர்டான் நதிக்கு மேற்கே பாய்ந்தாய் மேற்கு பலஸ்தீனம் பணிந்தது
உலக இராணுவ பலத்தில் ஒன்பதாவது இடமானாய்
இருநூறு அணு ஆயதங்கள் உன்வசமானாய்
பொஸ்பரஸ் குண்டுப் பரீட்சையில் பார்சிறக்க பாஸானாய்
இருநூற்று முப்பதுக்கு மேலான உனக்கெதிரான
ஐநாவின் தீர்மானங்களை உதறினாய்
பலஸ்தீனப் பயனின்றிப் உன்படுக்கையிலே போட்டுவிட்டு பரிகசித்தாய்
யேசுவையே சிலுவையிலறைய உத்தரவிட்டாயே
அலுக்கோசாய் உலவுவாய் யூதாசே
யூதாயிசமே "எம்மதமென்றே" பூதாகரமாகப் பொழிவாயே
போற்றி போற்றி ஸ்தோத்திரம்!

**ஸ்தோத்திரம் 04:**
மொசாட் மோகினியே மூலை முடுக்கெல்லாம் உன்படுக்கையே
பூவையும் பிஞ்சையும் குஞ்சையும் குருமனையும்
நரையையும் தாத்தா பாட்டியையும் கற்பிணித்தாயரையும்
பாரபட்சம் புறக்கணிப்பின்றி உன் போர்ப்பரணியிலே
ஆரையும் எவரையும் ஆளுக்கால் பேதமின்றி அழிப்பாயே
போற்றி, போற்றி அவதியேன் நமக்கு!

**ஸ்தோத்திரம் 05:**
எல்லோரும் ஓடுங்கள் என்று இருபத்திநாலு மணிநேர
அவகாசம் அருளினாய் போற்றி
அப்போதெல்லாம் நீ வானாவாய் பிளேனாவாய் குண்டாய் குறிவைப்பாய்
துப்பாக்கிச் சன்னமாய் துளையிடுவாய்
தூணாவாய் துரும்பாவாய் கட்டிடமெல்லாம்
காலடி மண்ணாய் காட்சியருள்பொழிவாய்
மருத்துவ மனையென்ன நோயாளர் ஐநூறு செத்தாலென்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்துடை அழித்தற் கடவுளே
கொன்றேனும் எமைக்காப்பாய் கோமகனே
மோசஸ்சின் பத்துக்கட்டளைகளில் கடலைக்கடப்பாய்
காலனை வெல்வாய் மோட்சமே மனிசருக்கென்று
மனிதப்பிறவியும் வேண்டுவதோ இம்மாநிலத்தேயென
தனி முழுமுதற் கடவுளாய் இனி எம்முடனே இருப்பாயே
இஸ்ரேல் பெம்மானே எம்மானே
எல்லோரும் இறப்பதல்லால் வேறொன்றறியேன்
பராபரமே! அரோகரா!

**ஸ்தோத்திரம் 06:**

சாஸ்டாங்க நமஸ்காரம் செய்கின்றேன்
பஞ்சாங்க நமஸ்காரம் பணிந்து வணங்குகின்றேன்
பிறதட்டை உள்வீதி வெளிவீதி உலகெலாம் போடுவேன்
பறவைக்காவடியில் என் பெண்டில் பிள்ளையையும் ஒன்றாக்கி எடுப்பேன்
பயபக்தியாய் உன்பரணியே பாடுவேன் எம்மானே!
சிவனொளிபாதம், ஸ்ரீபாதா, அடம்ஸ்மித்
என்றொன்றாய் எல்லோரும் அன்பாய் தொழுவாரென்றே ஓதுவார்
ஆனாலு மென்!
சைவர், கிறிஸ்தவர் பஜனை, ஆராதனை பாராதீர்
இலங்கையில் பிக்குகள் பிரித்தோதல் கேளாதீர்
எம் மதமும் சம்மதம் எனப் பேய்க்கதை பேசுவார்
ஜெரூசலம் என்றும் இஸ்ரேலுக்கேயென்று
ஜெயபேரிகை முழங்குவீர்
மதம் உங்கள் மதமென்று
மதயானை என்றே நீர் மலைமீது ஏறுவீர்
முகில் கிழித்து நட்சத்திரங்கள் விரட்டிச்
சூரியனை சுக்குநூறாக்கி
புதுச்சூரியனாய் நீரே பொலிவீர்
இஸ்ரேல் அம்மானே! பெம்மானே!

**ஸ்தோத்திரம் 07:**

“அறியாமையால் அவர்கள் செய்த தவறை
ஏழுதடவையென்ன ஏழு எழுபது தடவையும் மன்னிப்பாயாக!”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யேசு அப்பா சொன்னதைக் கேட்காதிருப்பாயாக!
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று எவனாம் சொன்னான் பேயன்!
"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" என்று ஏமாளியாய் ஆகாதே இறைவா!
என் இஸ்ரேல் அப்பாவே! என்னை ஈய்ந்தனன்
உன்னைச் சரண் அடைந்தனன்
எல்லாம் எனக்கினி இஸ்ரேல் அப்பாவே!
என்னை நன்றாய் இஸ்ரேல் படைத்தனன்
தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே
நமப்பார்பதி பதியே!
அரகர மகா தேவா!
ஆமென்!

(ஜீவநதி - 212 - 2023 புரட்டாதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துலையத்தான் போறான்

உண்ட வீட்டிலை இரண்டகம் நடக்குது
உலகமே நிண்டு வேடிக்கை பாக்குது
உண்மையை மீடியா ஒழிச்சுப்போட்டுது
இரண்டு சொட்டுக் கண்ணீருக்குப் பதிலைக்கேக்குது

வானுக்கு மேலே யூதன் பறக்கிறான்
காலடி மண்ணோடு கட்டிடம் சொரியுது

பாழாய்ப் போனதுகள் வலியிலை குளறுது
பாஷையும் விளங்கேல்லை பாவமெண்டு தெரியுது
எல்லைக் கதியால் அரை இஞ்சி நகர்ந்தால்
எங்கடை அப்பு கத்தியோடை கிளம்பும்

அங்கையும் எங்கடை அப்புகள் ஆயிரம்
தப்புக்கள் நடக்க துப்பாக்கி வெடிக்க
உலகத்து நாட்டாமை உரத்துக் கத்தி
கலகம் செய்பவன் ஹமாஸ் எண்டு சொல்லுது

ஆனையும் அங்கே அடிசறுக்குது
அமெரிக்கன் இஸ்ரேல் துலையத்தான் போறான்.

(வளரி - 2023 - கார்த்திகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலஸ்தீனம் தலை நிமிரும்

ஆயிரம் ஆயிரமாய் கட்டிடங்கள் மாடிகள்
ஒரு நொடியில் கவிழும் ஏவுகணையால்
வான் வழி விமானம் ஆளில்லா ட்றோண்
ஏன் என்று கேட்பாரின்றி தானாகப்பொழியும் குண்டுகள்

தூசுகள் துகள்கள் முகிலோடு மோதும்
பொஸ்பரஸ் குண்டுகள் சூரிய வெளிச்சத்தை மறைக்கும்
மாசு என்று சொல்லி மாசற்ற மனிசர் புதைவர்

வடகாஸாவிலிருந்து தெற்கே ஓடு ஓடு என்று
விமானத்துண்டுகள் சொல்லும்
ஓடு ஓடென குஞ்சுகள் குருமன்கள் கர்ப்பிணிப் பெண்கள் ஓடுவர் ஓடுவர்
தேடு தேடென குடும்பம் குலையும்
கணவனின்றி மனைவி பிள்ளையின்றித் தாயர்
ஒரு நாள் குழந்தையெனிலும் பிரசவித்த தாயரும் ஓடுவர் ஓடுவர்

தள்ளாடும் கிழவி தடுமாறும் கிழவன் எல்லோரும் ஓடுவர்
சின்னஞ் சிறு பொடியள் கல்லெறிந்து கல்லெறிந்து கண்டபடி ஓடுவர்
பென்னம் பெரு இளைஞர்கள் இடிந்த வீடுகளில்
- புதையுண்டோரை தேடுவர்

கழுதை வண்டிகள் எரிபொருளின்றி ஏத்தி இறக்கி ஓடும் ஓடும்
ஐ.நாத் தொண்டர்கள் நூற்றுவருக்கும் மேல் கொலையென வீழ்வர்
ஐ.நா பாவம் அது என்ன செய்யும் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தும்

அம்புலன்ஸ் வண்டியென்ன அதிலும் குண்டுகள் கொல்லும்
அல்சிவா ஆஸ்பத்திரியோ ஹமாஸ் சுரங்கமென்று
சுகாதாரத் தொண்டர்கள் வைத்தியர்கள் நோயாளர் குழந்தைகள் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரபட்சமின்றி இஸ்ரேல் படையணி தாறுமாறாய் கொல்லும்

மசூதியென்ன மனிசரென்ன மாண்டோரெல்லாம் ஹமாஸ் என்றே
பிபிசி, சி என் என் மீடியாவெல்லாம் பறையடிக்கும்
இன்றுமின்னும் தெற்கு காஸாவிலிருந்து
ஓடு ஓடு என்று விமானத் துண்டுகள் சொல்லும்
ஆனாலும்மென்ன விமானக் குண்டுகள் கொல்லும் ஆளரவமின்றி.

ஐ நா பொதுச் சபை தீர்மானம் அதற்கென்ன சுடு சுடு
ஐ நா பாதுகாப்புச் சபைத் தீர்மானம் அதையென்ன விடு விடு
யுத்த நிறுத்தம் செய் என்பர் அத்தியாவசியப் பொருட்களை
- அனுப்ப விடு என்பர்

பணயக் கைதிகளை விடுவோம் யுத்த நிறுத்தம் செய்தால்
எனக் ஹமாஸ் சொல்லும்
பணயக் கைதிகளை பத்திரமாய் மீட்போம்
பெஞ்சமின் நெதன்யாகு வஞ்சகமாய்ச் சொல்வான்

அஞ்சுவதற்கு இனியென்ன பலஸ்தீனத் தனி நாடு
நெஞ்சு நிமிர்த்தி நிலைநாட்டும் தனி நாடு
பலஸ்தீனம் தலை நிமிரும்
பாரெல்லாம் பாராட்டும்
உலகத்திற்கோர் உதாரணம்
சுயநிர்ணயத்துக்கோர் எடுத்துக்காட்டு

2023-11-17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலா காஸாவா

இஸ்ரேலா காஸாவா
இஸ்ரேலா பலஸ்தீனமா
மொசாட்டா ஹமாசா

உக்ரெய்னா ரஷ்யாவா
அமெரிக்காவா சீனாவா
பாகிஸ்தானா இந்தியாவா
சிங்களவரா தமிழரா
ஆ... ஆ... ஆவென்று
ஆரை யார் ஆர் வென்றார்
- இஸ்ரேலா

நீதியே நீதியே உன்பக்கம் யாருள்ளார்
நியாயமே நியாயமே உன்பக்கம் யாருள்ளார்
உண்மையே உண்மையே உன்பக்கம் யாருள்ளார்
நன்மையே நன்மையே உன்பக்கம் யாருள்ளார்
- இஸ்ரேலா

நீயா நானா நானா நீயா
வாயா கையா, கையா வாயா
இஸ்ரேல் டாங்கியா காஸா சுரங்கமா
இதிலே யார்தான் நீதியின் பக்கம்
நீதி எங்கள் காஸா பக்கம்
நியாயம் எங்கள் பலஸ்தீன் பக்கம்
உண்மை எங்கள் உலகின் பக்கம்
நன்மை எங்கள் சுயநிர்ணயப் பக்கம்
- இஸ்ரேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் யுகம்

நாம் மனிதர்
இயற்கை மனிதர்
தலை கண் மூக்கு வாய் காது தேகம் கை கால்
ஆளை அடையாளம் காட்டும் அவயங்கள் இவை
மூளை நுரையீரல் இரைப்பை இதயம் இரத்தம்
சிறுகுடல் பெருங்குடல் நாடி நரம்பு சிறுநீரகங்கள் எனப்பல
உள்ளுறுப்புக்களாய் உருக்கொண்டு உயிர்காவும்
மனிதர் நாம்

எமது உள் உறுப்புகளும் அவயவங்களும் பெறுமதிமிக்கன
வணிகச் சந்தையில் கோடான கோடி கொடுத்தாலும் கிடையாதன
ஏனெனில் நாம் இயற்கை மனிதர்
எமது இயக்கம் எம்மை வழிநடத்தும்
எமது சிந்தனை எமது கருத்து எமது செயல் அத்தனையும்
பூமராங் போல் எம்மை நோக்கித் திரும்பித் தாக்கும்
சக்தியுடையன என்பதால் எமது மக்கள் படையணி வலுவானது
நாம் எல்லோரும் இந்நாட்டுமன்னர்.

நமது தெரிவில் அரசாங்கம் அமையும் நீதிமன்றம் மாறும்
இராணுவம் பொலீஸ் சிறைக்கூடம் அதிகாரிகள்
அத்தனை அரசு இயந்திரமும் உருமாறும்
எமது தெரிவு சறுக்கிப்போனால்
கட்டிடங்கள் வீடுகள் மாடிகள் நொறுங்கும்
காணிகள் பூமிகள் பறிபோகும்
குழந்தைகள் பெண்கள் வயோதிபர் இளைஞர் கொலையில் மடிவர்
காணாமல் போவர் காலம் முழுதும்
கவலைக்கடல் அலை மோதி மகிழும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் இது மக்கள் யுகம் எனவே இது எங்கள் யுகம்
கல்லாகி மலையாகி றோபோக்களாய் இல்லாமல்
எல்லோரும் நற் சொல்லாகிப் பொருளாகி மனிசராகி
முட்டைக் கருவாகி ஓட்டை உடைத்து வெளிவரும் உயிராகி
கட்டியணைப்போம் கொஞ்சுவோம் மகிழுவோம் மக்களாகி

எங்கள் யுகம் எங்கள் யுகம் என்று பாடுவோம்
மக்கள் யுகம் மக்கள் யுகம்
எனக் கொண்டாடுவோம்
எல்லோரும் ஒருவராகிக் கூத்தாடுவோம்
ஒருவரே எல்லோருமாகி வானில் பறப்போம்
நாம் வானில் பறப்போம்

தத்தகிட தத்தகிட தித்தோம் ... ஓம் ... ஓம்...
தத்துமி தரிகிட தத்துமி தரிகிட தித்தோம் ... தித்தோம்...

2023.11.21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் வெல்லலாம்

வெற்றி வெற்றி வெற்றி என்று பாடு
வீரம் வீரம் வீரம் என்று கூடு
துணிவு துணிவு துணிவு என்று துள்ளு
நம்பு நம்பு நம்பு எங்கள் மக்களையே நம்பு

- வெற்றி

தோல்வி என்பதே எவர்க்குமில்லையே நாம் வாழும் உலகிலே
ஆல் போல் தழைப்போம் அறுகுபோல் வேரூன்றுவோம்
எல்லோரும் நன்றாகவே வாழுவமே நம் நாட்டிலே
பல்லோரும் வாழ்த்தவே துணிந்தோமே நாம்

- வெற்றி

சந்தேகமேயில்லை சரிநிகர் சமானமாய் நாம் எல்லோரும் வாழுவோமே
எந்தையும் தாயும் குந்திவாழ்ந்த இந்த மண்ணிலே கூடி நாம் மகிழ்வோமே
நீமுந்தி நான்முந்தி என்ற போட்டியின்றியே
வந்து சமாதானமாய் சந்தோசமாய் வாழுவோம் நாம் இந்த உலகிலே

- வெற்றி

புரிந்துணர்வாய் வாழ்ந்தாலே அதிலே புண்ணியமே பலகோடி
எரிந்து புகைந்து சீறாமல் பண்பாய் பகிர்ந்து பணிவாய்க்கூடி
உரிந்து பிறர் சீலை அவிழாமல் அன்பை அனைவர்குமாய்த் தேடி
பரிந்து சமாதானமேயென்றால் வருந்தி வாழாமல்
வென்று வாழலாம் நாம் எல்லோருமே

- வெற்றி

- 2023-11-19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் நானல்ல

அப்பு அம்மா பெத்த பிள்ளை
"சுகம் வளர்" "சுகம் வளர்" எனக் குளிப்பாட்டி
சுகத்துடன் வளர்த்த அம்மா
ஆச்சி பெத்தாச்சி வளர்த்த பிள்ளை
லச்சுமிக் குஞ்சாச்சி பொன்னுக் குஞ்சாச்சி
பாலேங்க மாமா மனோன்மாமி
பரஞ்சோதி அம்மான் சொத்தியம்மான்
பூமணி மாமி பொலீஸ் கனகசபை இராமணி
அப்பாத்துரை பரமானந்தசோதி சிவராசு சிதம்பரி
குஞ்சு சிவபாதம் மார்க்கண்டு அன்னம்மா
ஆள்மாறி ஊர் மாறி பொறுக்கித்தின்னியாய்
வளர்ந்தவன் நான்.

சிவலிங்க மாமா மாமி ருசியுணவு தந்து
பதின்ம வயதுப் பக்குவம் பாத்துக் காத்து
என்னால் எதுவும் முடியுமென்று உசார்ப்படுத்தி
படிப்பில் நடிப்பில் என் திசை காட்டியாய்
என்னை உருக்கி வார்த்த
மாமா மாமி கைவளர் காளை நான்

பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிஷன்
பாடசாலைப் பன்ன ரீச்சர்
குலமணி ரீச்சர் ஏழாலையெனைக் கொண்டோடி
சிரங்கு சொறி வருத்ததுக்கு இலை குழை மருந்து பூசி
குளிக்கப் பண்ணி மார்கண்டேயர் நாடகம் காட்டி
"வரப்புயர நீர் உயரும்" என்ற தலைப்பில்
மேடைப் பேச்சுப் பழக்கி
ஏழாலை வடக்குச் சனசமூகநிலையப்
பேச்சுப் போட்டியில் முதலாம் இடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ரோறியா கல்லூரிப் பேச்சுப் போட்டியில்
சந்ததியார் முதலாமிடமும் இரண்டாமிடம் நானுமாக
நாலாம் ஐந்தாம் வகுப்பில் என்னைச் செதுக்கிய
குலமணி ரீச்சர் அன்பில் அறிவில் விளைந்தவன் நான்.

“இஞ்சாய்” “இஞ்சாய்” எண்டு அப்பு
அம்மாவைக் கூப்பிடுவது போல்
கூப்பிட்ட என்ரை கையைப்பிடித்து
முற்றப் புழுதியில் விரலைப் பிடித்து தேய்த்து
நான் உன்ரை அம்மாவடா எழுது எண்டு சொல்லி
“அம்மா” “அம்மா” எண்டு எழுத்துப் பழக்கிய அம்மர்

நேரம் பார்க்கப் பழக்கிய செல்லத்துரை வாத்தியார்
வாய்ப்பாடு பழக்கிய மார்க்கண்டு வாத்தியார்
கணக்குப் பிழையெண்டால் காதை முறுக்கிய
ஏழாலைச் செல்வரத்தினம் வாத்தியார்
“அம்பிகை அடியார்களே” என்று கோயிலில் பேசும் சாமி வாத்தியார்
மன்ற ஆண்டு விழாக்களில் பேசும் கேனா மஸ்ரர், மணியம் வாத்தியார்
விருத்தாசலம் மாஸ்ரர் வேல்முருகன் மாஸ்ரர்
பண்டிதர் இராசகுரு அரிவரி கண்மணி ரீச்சர்
முதன் முதலில் வயலின் காட்டி அதை வாசிச்சுக் காட்டுற புனிதம் ரீச்சர்
ஆங்கிலம் படிப்பிச்ச வடிவான மலர் ரீச்சர்

பள்ளிக்குடம் விட்ட பிறகு என்னைப் பழிச்ச துரையனை
வட்டக்கச்சி நாகராசாவின்ரை புத்தி கேட்டு
கண்ணாடி ஃபிறேமின் கம்பியாலை நெஞ்சிலை குத்திவிட்டுப்
பாய்ஞ்சு பறந்த என்னை பிடிச்சு அடுத்தநாள்
பிரம்பு சுளரச் சுளர அடிபோட்ட
அமெரிக்கன் மிஷன் அச்சுவேலி தாடித் தலைமைவாத்தியார்
கார்த்திகேசன் எண்டால் குலை நடுங்கும்

முத்துத்தம்பி போடிங்கிலை சேர்த்து விட்ட
காங்கேசன்துறை மேதர் வீட்டார்
அங்கை கொண்டுபோய்ச் சேர்த்து
இடைக்கிடை வந்து பார்க்கிற புறபேசன் ஒவ்ஃபீசர் அம்மா
“ஆயிரத்தில் ஒருவன்” வின்சரிலை களவாய்ப் பார்த்ததறிஞ்சு
கால் கை உடம்பெல்லாம் விளாசியடித்த
சரவணமுத்து தலைமை வாத்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதம் படிப்பிச்ச அராலி சிவபூசணம் மாஸ்ரர்
நவமணி ரீச்சர் ஐயாத்துரை மிஸ்,
"நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வம்"
புத்தகம் பாராமல் கதை கதையாய்ச் சொல்லிப்
படிப்பிச்ச புத்தூர் நவரத்தின வாத்தியார்
நாக்கால் குமிழி வகுப்பிலை விட்டது கண்டு என்ரை
கன்னத்தில் பட்ட அறையின் சுவையும்
"பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாள்"
என்று வரும் போதே எங்களைக் கிண்டல் செய்யும்
புவியியல் பாட இராசம்மா ரீச்சர்
கம்பராமாயண அணிகளை அழகுறச் சொல்லித் தந்த
தாவடிப் பண்டிதர் சிவப்பிரகாசம் வாத்தியார்
உயிரியல் படிப்பிச்ச வசாவிளான் இராசையா மாஸ்ரர்
சிறுப்பிட்டி விநாசித்தம்பி வாத்தியார் திருநெல்வேலி
தலங்காவற் பிள்ளையார் கோயில் திரைச்சீலைக்கு
வர்ணம் தீட்டப் பழக்கிய தம்பையா வாத்தியார்
குடியியல் படிப்பிச்ச கேணியடி உயரமான நாகராசா மாஸ்ரர்
இங்கிலீஸ் படிப்பிச்சுத் தன்ரை வீட்டுக்கும் கூப்பிட்டுப் படிப்பிச்ச
நாயன்மார்க்கட்டு ஆங்கில ரீச்சர்
எத்தினை எத்தினை பேர்
எல்லோருமாய் நானானேன்.

விவசாயம் சொல்லித்தந்த கைலாசபிள்ளை
வயது குறைஞ்ச இளம் வாத்தியார்
ஆங்கில நாடகம் தமிழ் நாடகங்கள் பழக்கிய
கறுத்த தடித்த கம்பீரமான கனகசபை மாஸ்ரர்
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிச் சுகாதார விழாப் போட்டியிலை
"ரியூ பக்கிள் பசிலஸ்" நுளம்பரசனாய்
நடித்துப்பழக்கிய ஈவினை செல்வரத்தினம் வாத்தியார்
அவற்றை தமிழ் ஆங்கில எழுத்துக்கள்
கரும்பலகையில் அச்சாகப் படியும் அழகிய வண்ணங்கள்
அவர் போல் எழுதும் பயிற்சியில் நாம் பட்ட பாடுகள்
அப்பப்பா! என்னோடு சேர் நண்பர்கள் எத்தனை எத்தனை!

முத்துத்தம்பி முடிச்சு செங்குந்த இந்துக் கல்லூரி சென்ற நேரத்தில்
குழந்தை ம.சண்முகலிங்கம் மாஸ்ரர் அரசியலும்
நாவலப்பிட்டி ஆறுமுகம் மாஸ்ரர் வரலாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்த மிஸ் தமிழும்
யாழ்ப்பாணம் ஜோசப் மாஸ்ரர் புவியியலும்
வருடாந்த இல்லப் போட்டியில் திருநாவுக்கரசர்
இல்லத்தில் வட்டுக்கோட்டை சண்முகராஜா மாஸ்ரர்
அவரின் துணைவி முல்லைத்தீவு பவளராணி ரீச்சர்
அன்பும் ஆதரவும் பெற்று
இரு ஆண்டுகள் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்று
சம்பியின் ஆனதும் பொடியள் எல்லாரும் என்னைத்
தூக்கித் தோளில் சுமந்ததுவும்
பத்திரிகையில் படமாக அது வெளிவந்ததுவும்
அளவற்ற புழுகத்தை அள்ளித் தந்ததுவும்

"சாம்ராட் அசோகன்" நாடகத்தில் அசோகனாக நடித்துப்
பாராட்டுப் பெற்றதுவும் சண்முகலிங்கம் வாத்தியார்
"உவன்ரை -----------யிலை என்ன கொடுக்கன் கடிச்சுப்
போட்டுதோ! உந்தத் துள்ளுத் துள்ளுறான்" என்று
நடிப்பை விமர்சித்தமையும் இந்தியச் சினிமாக்காரர் போல்
" "என்ன" என்பதை "யென்ன" என்று
ஏன் உச்சரிக்கிறாய்" என்று நெறிப்படுத்தியதும்
செங்குந்த வித்தியாலயத்தில் செப்பனிடப் பட்டமையும்
சேர்ந்து விளையாடிய நண்பர்கள் எத்தனை எத்தனை
இன்னுமா நான் நானென்று சொல்ல!

கொழும்பு வளாகம் சட்டபீடம் கண்டதுவும்
விரிவுரையாளர் அரிய மொழிபல கேட்டதுவும்
நாகநாதன் மகள் நிர்மலா மேடம்
தமிழ்ச்சட்ட மொழி ஆக்கல் விற்பன்னர் பீதாம்பரம்
அவர் மகன் விரிவுரையாளர் ஞானசேகரன்
பேராசிரியர் சொர்ணபாலா
முன்னாள் நீதியரசர் எச்.டபிள்யூ. தம்பையா எனப்
பல்கலைக் கழகத்தில் பயின்றதுவும் சட்டக் கல்லூரி
சென்றதுவும் சீ.வி.விக்னேஸ்வரன், விரிவுரையாளர் அட்வகேற்
சரவணமுத்து எனப் பலரிடம் பாடம் கற்றதுவும்

பின்னாளில் பேராசிரியர் க.கைலாசபதி, சி.சிவசேகரம், சி.தில்லைநாதன்
முருகையன் சி.மௌனகுரு இ.சிவானந்தன் அ.தாசீஸியஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.சுந்தரலிங்கம் தேவ பெனடிக்ற் ஆ.த.சித்திரவேல்
வானொலிக் கலைஞர்கள் கே.எம்.வாசகர் மதியழகன்
வி.திவ்வியராஜன் சில்லாலையூர் செல்வராஜன்
கமலினி நடராஜசிவம் வரணியூரான் புவனலோஜினி வி.வி.வைரமுத்து,
யமன் மார்க்கண்டு கோகிலா மகேந்திரன் ஏ.ரி.பொன்னுத்தரை
குரும்பசிட்டி நடராசா மாஸ்ரர் பிரான்சிஸ் ஜெனம் ச.உருத்திரேஸ்வரன்
ஜி.பி.பேர்மினஸ் வீ.எம்.குகராஜா எஸ்.ஜெயக்குமார்
செல்வ பத்மநாதன் இளைய பத்மநாதன் ஓவியர் ஆசை இராசையா
மாவை வரோதயன் சிவசோதி சிதம்பரதிருச்செந்திநாதன்
கலைஞர் எழுத்தாளர் எத்தனை எத்தனை
இன்னுமா நான் நானென்று சொல்வது!

தோழர் எத்தனை எத்தனை பேர்
என்.சண்முகதாசன் கே.ஏ.சுப்பிரமணியம் சி.கா.செந்திவேல்
இ.தம்பையா சிவ இராஜேந்திரன் பன்னீர் ந.இரவீந்திரன் நவத்தார்
சூடாமணி சந்திரகுமார் பஞ்சலிங்கம் கு.வினோதன்
என எண்ண எண்ண நினைக்க நினைக்க
கணக்கற்ற தோழர்கள் என்னோடு உள்ளார்.
இன்னுமா நான் நானென்று சொல்வது!
வள்ளுவர் கம்பர் பாரதி இளங்கோ என்வசமாயினர்
நாயன்மார் ஆழ்வார் முருகன்
பிள்ளையார் சிவன் விஸ்ணு பார்வதி பிரம்மா
என் பக்கமானார்கள்
கால்மாக்ஸ் ஏங்கெல்ஸ் லெனின் ஸ்ராலின்
மா ஓ சேதுங் சேகுவேரோ பிடல்காஸ்ரோ ஹோசிமின்
மாக்ஸிம் கோர்க்கி லூசுன் செ.கணேசலிங்கன் இளங்கீரன்
ஒஸ்றோவ்ஸ்கி ஜீலியஸ் பியூசிக்
என் உயிரானார்கள்
என் உடலானார்கள்
இன்னுமேன் என்ன பேச்சு!

நான் நானா?
நான் நானல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலெக்ஸ் – 25

1

இருபத்தைந்து வயது இளந்தாரி
இறைபதம் சேருவது எவ்வாறெனில்
அலெக்ஸ் நாகராசா அமரர் என
அழைக்கும் அவ்வேளை அது கைகூடும்.

உருத்தெரியாமல் ஒளியின் வேகத்தை விட
தேவருறை யுலகுக்கு விரைவது எவ்வாறெனில்
கலைவாணிவீதி சித்தன்கேணி ஞானவைரவப் பெருமானடியில்
உலையாது ஒழியாது இளைஞர் ஒன்றுபடின்.

2.

எவடம் எவடம் புளியடி புளியடி

வட்டுக்கோட்டைக்குப் பாதை கேட்டால்
சட்டமும் ஒழுங்கும் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கெனச்
சொல்லி பகிடி விடுவர் தாமே சிரிப்பர் ரசிப்பர்.

பட்டப்பகலிலும் கைகட்டித்தூக்கி
வட்டமாக நின்று சாத்துதல் சளைக்காமல்
எட்டிப் பார்த்து எவரும் வந்தால்
கட்டித்தூக்கி மகிழ்ந்து துள்ளல்
பெற்றோல் ஊத்திய சொப்பிங் பையை
உற்றுப் பார்க்காமல் முகத்தை மூடிக்கட்டி
அடிப்பாதம் முதல் உச்சந் தலைவரை
இடித்து அடித்து இழுத்து விழுத்தி
சட்டத்தைப் பாதுகாத்துச் சன்னதங் கொள்ளல்
எவடம் எவடம் புளியடி புளியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.

மாதம் கார்த்திகை 2023 என்பதால் காவல்துறையார்
மாவீரர் தினக் கொண்டாட்டத்தில் மகிழ்வர்
தாமே நீதியின் தாசரென்று நான்கு நாட்கள்
தொங்க விட்டு தொண்ணூற்றாறு மணிநேரக்
கொண்டாட்டத்தில் குதுகலிப்பர் குதிப்பர்.

4.

கனடா, இங்கிலாந்து, ஒஸ்ரேலியா போகலாம்
வில்லங்கம் இல்லை விசா தேவையேயில்லை
எல்லாம் நாம் செய்வோம் எதுவும் தேவையில்லை
சித்தன்கேணியில் நின்றால் ஓட்டோவில் வருவோம்
புண்ணாக்குத் தவிடு விலை கூடிப்போச்சுது
எருது இப்போது வைச்சிருக்கக் கட்டாது.

உத்தமராய் வாருங்கள் வட்டுக்கோட்டைக்கு
சித்தங் கலங்காமல் சிரசும் போகாமல்
எத்தரப்புக்கும் எதுவும் சொல்லாதீர்
இத்தரையில் ஊன் உடம்பைக் கிடத்திவிட்டு
உப்பரிகையில் வேற்றுக் கிரகத்தில்
விட்டு விடலாம் உயிரோடு நீர் உலாவ

நாகராசா அலெக்சைக் கேளுங்கள்
அவன் இப்போ அங்குள்ளான்
சித்திரகுப்தன் துணைக்குள்ளான்
ஒஸ்ரேலியா திருப்பி அனுப்புவது போல்
இஸ்ரப்படி எவரும் திரும்பாமல்
உடல் இங்கே உயிர் அங்கே
சட்டம் ஒழுங்கைக்
காத்தல் நம் கடன்
பாதுகாத்தல் நம் பணி
உங்களுக்கேன் பயமினி!

(2023.11.19 ம் திகதி சித்தண்கேணி நாகராசா அலெக்ஸ் என்ற 25 வயது இளைஞனின் ஆட்கொலை நினைவாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகமயப் பூராயம்

இருஞ்சற்றே பொறும்
எல்லாம் சரிவரும்

தொல்லையில் வாழ் மக்கள் சூழுந்துயர் தேக்கி
அல்லலுறுத்தி அவமானமாக்கியதே - எல்லை
இல்லா உலகமயமாகும் பல்தேசியக் கொம்பனியார்
சொல்லாமலே செய்த தேன்.

துன்பமே வாழ்க துயரத்தோர் வாழ்க
எல்லாக் காலமும் என்னோடு நீங்காதிருப்பாய் வாழ்க
பூ கோளம் முழுதாண்ட போகப் பொருளே வாழ்க
பாதாளக் குண்டராய் நின்று பண்ணுவிப்பாய் வாழ்க
யாவும் ஒருமையே யெனப் போதிப்பார் புகழ் வாழ்க.

வாழ்வு கெடுத்தாண்ட வல்லவனே வெல்க
சாவைத் தந்தருளுமுன் னாயுதங்கள் வெல்க
ஆயுதந் தரித்தார் அருங்கரங்கள் வெல்க
கரங்குவிவார் மனம் மகிழ வுன்பாதங்கள் வெல்க
பயங்கர மோங்குவிக்கும் பாரோன் புகழ் வெல்க

துயரனே போற்றி துன்பனே போற்றி
வென்றவனே போற்றி வென்றவுன் பாதமே போற்றி
அன்பாய்த் தேர்தலில் நின்று அறுப்பாய் போற்றி
அடிமைகொளும் மேலாதிக்கத் தேவனடி போற்றி
மனிதப் பிறப்பறுக்கும் போர் வெறியர் அடி போற்றி

தீராத துன்பம் அருளும் துரையே போற்றி
ஆறாது அழுமென் நெஞ்சில் நின்ற காரணத்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தயவாலே கடனாளியாகி அவன் பாதம் பணிந்து
நெஞ்சு மகிழ உலகமயப் பூராயந்தன்னை
துஞ்சி மாழும் வரை மானுடர்க் கோயா துரைப்பன் யான்

எண்ணிலடங்காச் சைவாலயங்கள் தனையுடைத்து
மண்ணிருந்து மடுமாதா தானோடி எப்படியோ மீண்டும் வந்துதித்து
விண்ணிறைந்து மண்ணிறைந்து புகழ்பாடி
கண்ணிகள் புதைத்தும் எடுத்தும்
ஆழ ஊடுருவிக் கருணை பொழியமுன்
சொல்லொணாப் பெருமைகள் சொல்லுமா றொன்றறியேன்.

நோயாளியாய் மொக்கனாய் பேயனாய் பிச்சைக்காரனாய்
சிங்கமாய் யானையாய் மணியாகித் துவக்காகி
அகதியாய் செம்மறியாய் வாக்காளனாய் கழுதையாய்
மரநிழலாய் புல்வெளியாய் குப்பையாய் குடிசையாய்
செல்லாப் பொருளாய் இச்சீவிய காலத்துள்

எல்லாப் பேறும் பெற்றிளைத்தேன் உலகமயப் பேரம்மான்
மெய்யாய் உன் திறன் யாவும் ரீவியில் கண்டின்புற்று
வீட்டுக்குள்ளேயே வியாபித்துள்ளேன்.
உய்யவென் உள்ளத்துள் ஈகோவெனும் ஆங்காரமாய்
மெகாசீரியலில் மானாட மயிலாட

அற்புதங்கள் யாவும் தானாட வைத்தவனே
சினிமாவையும் மதத்தையும் சேர்த்தே ரசித்தபடி
இருங்களென்று சொல்லி தமிழ்நாடெங்கும்
சும்மாவே ரீவி தந்த பெருபுண்ணியனே

பொய்யாய் கனவாய் வாழ்வினின்பமெலாம் அகல
மெய்யாய் ஊரும் உறவும் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிருகின்ற மேற்குமய மெய்ச்சுடரே
இங்கிருந்து என்னபயன் என்று இடம்விட்டு இடம்பெயர்ந்து
அஞ்ஞானி என்னை அகதி என்னும் ஸ்ரேற்றஸ் தருநல்லரசே

ஊக்கம் உளவுறுதி உள்ளாய் அனைத்துலகும்
ஆக்குவாய் துன்பம் அருள்பொழிவாய் என்ஜிஓவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பாய் மானுடரை ஆயுதத்தால் பொருள் குவிப்பாய்
நினைத்தொழுகின்
மனிதவுரிமையெனப் பேசித் தாயாய் நின்றானே
ஏற்றம் பெற நாம் யாவுமாகிய மறையோனே.

உறவும் சுற்றமும் வாழ்விழந்தார் போலச்
சிறப்புறு உலகமயச் சிந்தனையும் வாயுறி நின்று
பிறந்த ஊர் துறக்க அருளும் எங்கள் பெருமான்
நிறபேதமுடையாய் நீளுலுலகை மேற்குலகார் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் என்செயலால் என்னை

மறைத்திட மூடிய தூய வுலகமயவிருளை
பொருளாசையெனும் தனிச்சொத்தாற் கட்டிப்
பித்தனாய் பிறரைப் பார்த்துப் போட்டியோடோடி
கிறடிற்காட், செல்போன் வாயால் குளறி
பறந்து அலைந்து உளமெலாம் வஞ்சனையைச்செய்ய

விலங்கு மனத்தால் உலகமயமே உனக்கு
கலந்த அன்பாகிச் சுயநலத்துள் ளுருகும்
நலந்தான் பெறாத சிறியேற்கு உதவிஎம்
நிலந்தன் மேல் வந்தருளி விசா கிறீன்காட் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு

தாயிற் சிறந்த தனிச்சொத்துடைமைத் தத்துவனே
மாசற்ற சேதிசொல் சீஎன்னன் மெய்ச்சுடரே
காசுசேர் டொலரே பவுணே யூரோவே
பாசமாம் பற்றறுத்து ஆத்தலையச் செய்வோனே
ஆசைசேர் ஆக்கினைகள் நெஞ்சிலே வஞ்சம்வர

பேராசை நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராதமுத வாழ்வில் அலைச்சல் தருவோனே
ஒடுக்குவோர் உள்ளத்து ளொளிக்கும் ஒளியானே
ஓடாய் உருக்கியென் குற்றுயிராய் நின்றானே
துன்பமும் துயரமும் தருவோனே அம்மானே

ஆசைக்கு ஆசையனே ஆசையுமாய் அலைச்சலுமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழுக்கும் ஆசையாய் மீசைக்கும் ஆசையாய்
நுகர்வுப் பொருளாய் உள்ளானே எல்லாமாய்
ஈர்த்தென்னை யாட்கொண்ட சேல், சொப்பிங் பெம்மானே
ஆர்த்த அஞ்ஞானத்தாற் கொண்டுள்ளார் தங்கருத்தின்

போக்கற்ற போக்கே நோக்கற்ற நுண்ணுணர்வே
ஆக்கமுறைப் பின்றியே அனுபவிக்கும் பேக்குணமே
தூக்கமின்றியே இன்ரநெற் காண்பரிய பேரொளியே
ஊக்கங் கெடவே சற்றிங்கே சல்லாபமாய் நின்ற
ஹோமோன்ஸ் சுரந்திடவே சொல்லாத பாலுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே சீரழிவாய்
ஊற்றனே ஊற்றத்தழிவே என் சிந்தனையுள்
ஆற்றையன் உழைப்பில் பேர்புகழ் உடையானே
தேற்றுவாரின்றி தெருவெல்லாம் உடல்கிடப்ப
வேற்றார் விற்கும் போதையினால் ஐயகோ வென்றென்று

ஆடம்பரத்தையே போற்றிப் புகழ்ந்திருந்து
மெய்கெட்டுப் பொய்யானார்
அரங்கேற்றம் கலியாணம் பொன்னாடை விழாவென்று
சடங்கு சம்பிரதாயமென்று விசர் வந்து சாகாமே
பேர்புகழ் கொலை கொள்ளை நடத்துவிக்க வல்லானே.

நள்ளிருளில் மட்டுமன்றி நாளெலாமாடும் நாதனே
மேற்றிசைக் கூத்தனே தென்னிலங்கை நாட்டானே
மானுடப்பிறவி அறுப்பானே கோவென்று
செய்யற்கரிய சிங்கமுகத் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் வெள்ளைவான் உள்ளே சீவன் போய்
எல்லோரும் பிணத்தைச் சுமந்து"

இருஞ்சற்றுப் பொறும்
எல்லாம் சரிவரும்

(புதுவசந்தம் 1973-2008)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. தேவராஜா அவர்களை ஈழத்து இலக்கிய உலகம்
நன்கறியும். தொடர்ச்சியான கலை இலக்கியச்
செயற்பாட்டாளராகவும், கலை இலக்கிய வாதியாக
வும் திகழ்பவர். கவிதை, நாடகம். விமர்சனம், பத்தி,
கட்டுரை, சிறுவர் பாடல், சிறுவர்கதை என இலக்கி
யத்தின் பல்வகைமை களிலும் தன் தடத்தைப் பதித்து
வருபவர். இந்த நூலில் உள்ள பல கவிதைகள் சமூக
நோக்கானவை. மனிதாய ரீதியாக அணுகத்
தக்கவை. மனிதன் சுகந்திரமாக வாழ வேண்டும்
என்னும் எண்ணக் கரு கொண்ட படைப்புகளாக
இவரது கவிதைகள் விரிந்துள்ளன. வீடு, நாடு,
உலகம் என எல்லா இடமும் காணப்படுகின்ற
அடக்குமுறைகளை இவரது கவிதைகள் வாயிலாக
கண்டு கொள்ள முடிகின்றது. நிகழ்கால உலகின்
சாட்சியங்களாக இவரது இத்தொகுப்பில் உள்ள
கவிதைகள் காணப்படுகின்றன. அனைத்து
வாசகர்களுக்கும் புரியத்தக்க மொழியில் அழகிய
தமிழில் கவிக்குரிய மொழியோடு அமைந்த
இக்கவிதைகள் அனைத்தும் வாசகனை விருப்புறச்
செய்யும் என நம்புகின்றேன்.

– க.பரணீதரன்

9 789550 958238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org